# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 170/2021 நாள்.16.02.2026

### DW1- திரு .கரிகாலன், த/பெ. திரு.சுந்தர்ராஜ்

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கு சொத்து எனக்கு பாத்தியமானது என்றால் ஆமாம். வழக்கு சொத்தை 1995இல் சுப்ரமணியன் என்பவரிடம் கிரையம் வாங்கினேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 அந்த கிரைய பத்திரம் என்றால் ஆமாம். அந்த கிரைய பத்திரத்தை ஒப்படைப்பு செய்துதான் வாதியிடம் ரூபாய் 6 லட்சம் கடன் வாங்கினேன் என்றால் வாதியிடம் வாங்கவில்லை, ரவிகுமாரிடம் என்பவரிடம்தான் நான் கொடுத்தேன். ரூபாய் 6லட்சத்திற்கு அடமான பத்திரம் பதியபட்டுள்ளது என்றால் ஆமாம். ரவிகுமாரிடம்தான் கொடுத்தேன். அந்த அடமான பத்திரம் வா.சா.ஆ.1 என்றால் ஆமாம். அந்த அடமானத்திற்கு நான் சிலகாலம் கடன் செலுத்தினேன் என்றால் ஆமாம். நான் பணத்தை கொடுப்பதை நிறுத்தியதும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் ஆமாம் அதுதான் வா.சா.ஆ.3 என்றால் ஆமாம். அதை நான் பெற்றுகொண்டதை காண்பிக்க வா.சா.ஆ.4 ஆகும். நான் அதற்கு மறுஅறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. நான் என்னுடைய தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.1, 2 2016, 2017 ஆண்டுக்குரியது என்றால் ஆமாம். வாதிக்கு அடமான பத்திரம் எழுதி கொடுத்தது 2016 என்றால் ஆமாம். ரவிகுமார் நடத்திய கல்விமைத்தின் பெயர் என்ன என்றால் பாரதியார் பல்கலை கழக தொலைதூர கல்விமையம். அவ்வாறு நடந்ததற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த ரவிக்குமார் எனக்கு சொந்தக்காரர் என்றால் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் இளையமகன் துஸ்யந்த் பணம் திரும்ப வாங்கியதாக சொல்லியுள்ளேனே அதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். அந்த காசோலைகள் பணமில்லாமல் திரும்பிவிட்டதால் பணம் பெறபட்டதா என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். ரவிகுமார் வங்கி கணக்கில் மாதம் 24000 செலுத்தியதாக சொல்லுகிறேனே அதற்கு ஆதாரம் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 1.50 லட்சம் கட்டியதாக சொல்லுகிறேனே அதற்கு ஆதாரம் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வாதியிம் 1லட்சம் கொடுத்ததாக சொல்லுகிறேனே அதற்கு ஆதாரம் தாக்கல் செய்தேன என்றால் இல்லை. அடமான பத்திரத்தில் வரவு இல்லை என்றால் ஆமாம். வாதியிடம் 4,32,000 கொடுத்ததற்கு ஆதாரம் இல்லை என்றால் ஆமாம். அடமான பத்திரத்தை நான் படித்து பார்த்தேன் சாமிநாதன் என்ற பெயர் போட்டிருந்தது சார்பதிவாளர் அலுவலகத்திற்கு போய்

கையெழுத்து போட்டேன். சொத்திற்கான பத்திரத்தை அடமானமாக கொடுத்து வாதிக்கு அடமானம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிக்கு தாவாவில் கோரிய தொகையை கொடுக்க கடமைபட்டவன் என்றால் சரியல்ல. எனக்கும் ரவிகுமாருக்கும் உள்ள பிரச்சனையில் வாதியிடம் வாங்கிய கடனை திரும்ப கொடுக்காமல் ஏமாற்ற பார்க்கிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.16 14:38:21 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**